முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

நாள்: 10.03.2026, E.P.No.11/2024 in OS.445/2018 . ம.சா.1.வெள்ளியங்கிரி,

த/பெ. நஞ்சப்பகவுண்டர்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிர்மனுவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

1) வண்டித்தடம் மேகோட்டில் தென்வடலாகவும் கிழக்கே திரும்பி தெற்கோட்டில் கிழமேலாகவும் செல்கிறது. பூமிக்கு செல்வதற்கு அது ஒன்று தான் வண்டித்தடம் என்றால் சரிதான். பூமிகளுக்கு நடுவில் வண்டித்தடம் எதுவும் கிடையாது என்றால் எதிர்மனுதாரர்கள் பூமியில் இருந்த வண்டித்தடத்தை அவர்களே அழித்துவிட்டார்கள். அந்த தடத்தில் எனக்கு எவ்வித பாத்தியமும் இல்லை என்றால் சரிதான். என்முன் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளவாறு தான் மேற்படி தடம் புதர்மண்டிக்கிடக்கிறது என்றால் சரியல்ல. களத்துசாளைக்கு கிழக்குபகுதியில் மட்டும்புதர் மண்டிக்கிடக்கிறது.

2) தாவா வண்டித்தடத்தை எதிர்மனுதாரர்கள் அழித்துவிட்டார்கள் என்று தான் மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா வண்டித்தடத்தை பொறுத்து 3 அசல் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் பாகம் பொறுத்து தான் வழக்குகள் நிலுவையில் உள்ளது, அந்த வழக்கில் நான் தரப்பினர் என்றால் சரிதான். தாவா வண்டித்தடம் புதர் மண்டிக்கிடக்கிறது என்றும் நான் சொல்வது போல் எதிர் மனுதாரர்கள் வண்டித்தடத்தை அழித்து சோளம் பயிரிட்டு உள்ளார்கள் என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல. அதே போல் எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தின் உத்தரவைமதிக்காமல் மீறி நடந்தார்கள் என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல.

3) 1987 ம் ஆண்டு கிரயம் பெற்ற சமயத்தின்படியும் அ.வ.எண். 445/2008 ன் வழக்கு தீர்ப்பின் படியும் தாவா வண்டித்தடத்தை நான் அனுபவித்தது கிடையாது

ஒப்பம்/-(R. சுஜாதா),

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி

என்றால் சரியல்ல. பொள்ளாச்சி கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கிற்கு ஆதரவு வேண்டும் என்பதற்காக இந்தமனுவை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால்சரியல்ல. கூடுதல் மாவட்டஉரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள உரிமையியல் வழக்கு காலம் கடந்து தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் அதற்கு ஆதரவு வேண்டி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ம.சா ஆ 6 புகைப்படத்தில் 1, 2 படங்கள்இந்த தாவா சொத்திற்கு சம்மந்தப்பட்டது அல்ல என்றால் சரியல்ல, எதிர்மனுவாதி நீதிமன்றத்தின் உத்தரவை எப்போதும் மீறி நடந்தது கிடையாது என்றும் அவர்கள் உத்தரவை மதித்து நடக்கக்கூடியவர்கள் என்றும் அதனால் நான் தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/-(R. சுஜாதா),
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.